**Spl.CC.No.80/2019**

**22-12-2020** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.9** பாலசுப்பிரமணியம் மீண்டும் மனுவின் பேரில் **(CMP.No. 628/2020)** மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**28.11.2011** ஆம் தேதி நான் கருமத்தம்பட்டி உள்வட்ட வருவாய் ஆய்வாளராகப்பணிபுரிந்த போது சூலூர் வட்டாட்சியர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் முன்னிலையாகுமாறு எழுத்து பூர்வமான உத்திரவு எதுவும் அளிக்கவில்லை. தொலைபேசி மூலமாக என்னிடம் தெரிவித்தார். சூலூர் வட்டாட்சியருக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திலிருந்து தகவல் எப்படி வந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது. கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில், சூலூர் வட்டாட்சியருக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால், அவ்வாறு சொல்லியுள்ளேனா என எனக்கு தற்பொழுது நினைவில் இல்லை. தொலைபேசி மூலமாக வட்டாட்சியரிடமிருந்து எனக்கு தகவல் வரப்பெற்றதாக தற்பொழுது சொல்லும் சங்கதியை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் தெரிவித்திருக்கிறேனா என்றால் அது குறித்து எனக்கு நினைவில் இல்லை. வழக்கு சம்மந்தமாக செல்லவேண்டிய இடம் எந்த தாலூக்காவில், எந்த கிராமத்தில் உள்ள விவரம் எனக்குத் தெரியுமா என்றால், எனக்கு அப்போது தெரியாது. சோதனையிடச் சென்ற வீடு கருமத்தம்பட்டி உள்வட்டத்தைச் சேர்ந்ததா என்றால் இல்லை. அந்த வீடு கோவை நகரம், சிங்காநல்லூர், நகர எல்லைக்குட்பட்டதாகும். சோதனையிட சென்ற வீடு அமைந்துள்ள இடத்திற்கு வருவாய் ஆய்வாளர் பதவி உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு கோயமுத்தூர் தெற்கு வட்ட ஆள்வரைக்குள் வருவதாகும். **28.11.2011** ஆம் தேதிக்கு முன்பாக நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு சென்றதில்லை. யாரை விசாரித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்குச் சென்றேன் என்றால், அந்த அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் பொது மக்களை விசாரித்து அலுவலகத்திற்குச் சென்றேன். நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்குச் சென்றிருந்தபோது அங்கு யார், யார் இருந்தார்கள் என்றால் அங்கு **Officials** நிறையப்பேர் இருந்தார்கள். குறிப்பாக யார், யார்

இருந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. அங்கு காவல் துறை சீருடையில் எத்தனை பேர் இருந்தார்கள், காவல் துறை சீருடையின்றி சாதாரண உடையில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தற்பொழுது நினைவில்லை. அங்கிருந்த போலீஸ் அதிகாரி என்னை திருமதி சண்முகபிரியா மேடம் அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். திருமதி சண்முகபிரியா மேடம் அவர்கள் என்னை **29.11.2011** ஆம் தேதி காலை **5** மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு வருமாறு என்னிடம் அறிவுறுத்தினார். அப்போது என்னிடம் திருமதி சண்முகபிரியா மேடம் அவர்கள் என்ன வழக்கிற்காக எங்கு செல்லவேண்டும் போன்ற விவரங்கள் எதையும் என்னிடம் சொல்லவில்லை. **29.11.2011** ஆம் தேதி காலை **5** மணிக்கு நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்குச் சென்றபொழுது அங்கு நிறைய பேர் குழுக்களாக இருந்தார்கள். போலீஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. அந்த குழுக்களில் இருந்த நபர்களை எனக்கு அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். தஞ்சாவூர் டி.எஸ்.பி அரங்கராஜனிடம் என்னையும், சிவக்குமார், உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் என்பவரையும் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு செல்லும்போதே அங்கு டி.எஸ்.பி அரங்கராஜன் அலுவலகத்தில் இருந்தாரா என்றால், ஆம் இருந்தார். என்னையும், சிவக்குமாரையும் டி.எஸ்.பி அரங்கராஜனிடம் அறிமுகப்படுத்தி வைக்கும் போது இவ்வழக்கு சம்மந்தமான விவரங்கள் எதையும் சொன்னார்களா என்றால் சொல்லவில்லை. **28.11.2011** ஆம் தேதிக்கு முன்பாக நான் கோயமுத்தூர் நகருக்குள் வந்திருக்கிறேனா என்றால், வந்திருக்கிறேன். நான் பொள்ளாச்சியில் பணி புரிந்து வந்ததால் ஓரளவிற்கு கோவை நகரத்தின் சில இடங்களை எனக்குத் தெரியும். அந்த சமயத்தில் **(2011)** நான் கோவையில்தான் குடியிருந்து வந்தேனா என்றால், ஆம் கோவை குறிச்சி வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் குடியிருந்து வந்தேன். டி.எஸ்.பி அரங்கராஜன் தலைமையிலான குழு என்னையும், சிவக்குமாரையும் எங்கு அழைத்துச் செல்லவுள்ளார்கள் என்ற விவரம் எங்களுக்கு அப்பொழுது தெரியாது. கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கும், சோதனையிடச் சென்ற இடம் அமைந்துள்ள சிங்காநல்லூர் வரதராஜபுரத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் **20** கி.மீ தூரமாகும். ஊழல் தடுப்பு அலுவலகத்திலிருந்து சிங்காநல்லூர் வரதராஜபுரம் செல்ல எவ்வளவு மணிநேரம் பிடித்தது

என்றால் ½ மணி நேரத்திலிருந்து ¾ மணி நேரமானது. சோதனையிடச் சென்ற பொழுது டி.எஸ்.பி அரங்கராஜன், நான், சிவக்குமார் ஆகியோர்களுடன் மேலும் இரண்டு காவலர்கள் வந்தார்கள். எத்தனை வாகனத்தில் சென்றோம் என்றால் **2** வாகனத்தில் சென்றதாக நினைவுள்ளது. அது குறித்து சரியாக தற்பொழுது நினைவில் இல்லை. ஊழல் தடுப்பு அலுவலகத்திலிருந்து காலை சுமார் **6.30** மணிக்கு புறப்பட்டு சோதனை செய்யவுள்ள இடத்திற்கு காலை சுமார் **7.15** மணிக்கு சென்றடைந்தோம். சோதனையிட உள்ள இடத்திற்கு செல்லவேண்டி யார் கூறினார்கள் என்றால், முன்கூட்டியே ஊழல் தடுப்பு அலுவலகத்தினர் அந்த இடத்தை பார்த்து வைத்திருந்துள்ளார்கள். ஊழல் தடுப்பு அலுவலகத்திலிருந்து ஒரு **Guest house-**க்குச் சென்றோம். அங்கிருந்து ஒவ்வொரு குழுவும் செல்லவேண்டிய இடம் குறித்து சொல்லி பிரித்து அனுப்பினார்கள். அவ்வாறு பிரித்து அனுப்பியது யார் என்றால் உயர் அதிகாரிகள் அனுப்பினார்கள். அது குறித்து எனக்கு நேரடியான தகவல் எதுவும் இல்லை. தற்பொழுது நான் தெரிவிக்கும் மேற்படி விவரத்தை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சோதனை செய்யவுள்ள வீட்டிற்கு ஏற்கனவே சென்று வந்தவர் யார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சோதனையிடச் செல்லும் இடம் குறித்த வருவாய்துறை ஆவணங்கள், இதர ஆவணங்கள் கையில் வைத்திருந்தார்களா என்றால் அது குறித்து எனக்கு நினைவில்லை. சோதனையிடவுள்ள இடம் அமைந்துள்ள கிராமத்தின் கிராம நிர்வாக அதிகாரியையோ, காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர்களையோ அங்கு அழைத்துச் செல்லவில்லை. சோதனையிடச் சென்ற வீடு அமைந்துள்ள பகுதி குடியிருப்பு வீடுகள் நெருக்கமாக உள்ள பகுதி என்றால் சரிதான். சோதனை செய்யவுள்ள இடம் அமைந்துள்ள பகுதியில் வசிக்கும் பொது மக்கள் எவரேனும் சோதனையின்போது உடன் இருக்கவேண்டி டி.எஸ்.பி அழைத்தாரா என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. சோதனைக்குச் சென்ற வீடு எத்தனை தளங்களைக் கொண்டது, எத்தனை அறைகளைக் கொண்டது என்றால் அது பற்றி எனக்கு சரியாகத் தெரியவில்லை. நானும், சிவக்குமாரும் சோதனையிட்ட வீட்டின் எல்லா இடங்களுக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. தேவையான இடத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். சோதனையின்பொழுது சோதனையிடும் வீட்டின் குடும்ப தலைவர் இல்லை. அவருடைய மகன் கண்ணன் என்பவர் இருந்தார். சோதனையின்போது டி.எஸ்.பி அரங்கராஜன், சிவக்குமார் மற்றும் காவலர்கள் ஆகியோர்களுடன் நானும் இருந்தேன். எந்த, எந்த அறையில்

எத்தனை பீரோக்கள் இருந்தது என்றால், அவ்வாறு பீரோக்கள் இருந்ததாவும், அதை பார்த்ததாகவும் எனக்கு நினைவில் இல்லை. அந்த வீட்டில் ஆவணங்கள் நிறைய இருந்தன. அந்த ஆவணங்களில் தேர்ந்தெடுத்து இரண்டு ஆவணங்களை கைப்பற்றினார். மற்ற ஆவணங்கள் எது சம்மந்தமான ஆவணங்கள் என்றால் அவை பொருத்தமில்லாத ஆவணங்கள் எனச் சொன்னார்கள். எவ்வளவு பணம் எடுத்தார்கள் என்றால், ரொக்கமாக பணம் எடுத்ததாக எனக்கு நினைவில் இல்லை. நகைகள் எவ்வளவு எடுத்தார்கள் என்றால், அது குறித்தும் எனக்கு நினைவில் இல்லை. வைப்பீட்டு ரசீதுகள், வங்கிக் கணக்குப் புத்தகங்கள் முதலியன எவ்வளவு எடுத்தார்கள் என்றால், வங்கிக் கணக்குப் புத்தகங்கள், வைப்பீட்டு ரசீதுகள் சோதனையின்போது எடுத்ததாக எனக்கு நினைவில் இல்லை. கோவை சிங்காநல்லூர் சார் பதிவு அலுவலகம் சார்ந்த சமாதான திட்டத்தின் அடிப்படையிலான ஒரு ஆவணமும், வருமான வரி **Assessment** அலுவலகத்தில் தாக்கல் செய்த ஆவணம் ஆக இரண்டு ஆவணங்களைக் கைப்பற்றினார்கள். சமாதான திட்டத்தின்கீழான ஆவணம் சிவா என்பவரின் கையில் இருந்தது. மேற்படி சிவா என்பவரின் பெயரில் தான் **Income tax assessment** ஆவணமும் இருந்தது. சோதனையின்போது வரைபடம் எதுவும் வரைந்தார்களா என்றால் **Rough** ஆக வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகசர் தயார் செய்தார்களா என்றால், அவ்வாறு ஒரு ஆவணம் தயார் செய்தார்கள். அந்த ஆவணம் பார்வை மகசர் எனக் குறிப்பிடப்படவில்லை. சாதாரணமாக மகசர் என்றே குறிக்கப்பட்டுள்ளது. முதல் விசாரணையிலும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையிலும் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என சொல்லியிருக்கிறேன் என்றால் ஆம். தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் நான் எத்தனை கையெழுத்துக்கள் செய்தேன் என்றால், **7,8** கையெழுத்துக்களுக்கு மேல் செய்து கொடுத்தேன். நான் கையெழுத்திட்ட ஆவணங்களை எழுதியவர் யார் என்றால் காவல் துறையைச் சேர்ந்தவர்கள்தான் எழுதினார்கள். யார் எழுதினார்கள் என்று எனக்கு குறிப்பாகத் தெரியாது. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் டி.எஸ்.பி அரங்கராஜனிடம் கொடுத்ததாகச் சொல்லும் அங்கீகாரக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். **28.11.2011** ஆம் தேதி மாலை **5** மணிக்கும், **29.11.2011** ஆம் தேதி மாலை **5** மணிக்கும் நான் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்குச் சென்றதாகச் சொல்வதும், தஞ்சாவூர் டி.எஸ்.பி அரங்கராஜன் என்பவரை அங்கு வைத்து எனக்கு அறிமுகப்படுத்தியதாகச் சொல்வதும், **29.11.2011** ஆம் தேதி கோவை மாநகராட்சி

உப்பிலிபாளையம் வரதராஜபுரத்தில் உள்ள சிவா என்பவரின் வீட்டிற்குச் சென்றதாகச் சொல்வதும், அந்த வீட்டின் உரிமையாளரின் மகனிடம் சோதனையிட வந்திருப்பதாக தெரிவித்து அந்த வீட்டைச் சோதனையிட்டதாகச் சொல்வதும், அந்த வீட்டிலிருந்து இரண்டு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகச் சொல்வதும், அது குறித்து **Ex.P.9** மகசர் தயார் செய்ததாகச் சொல்வதும், அதில் நானும், சிவக்குமாரும், மற்றவர்களும் சாட்சி கையெழுத்து செய்ததாகச் சொல்வதும், அதே நாளில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்ததாகச் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் வைத்து **Ex.P.9** ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றும், நானும், சிவக்குமாரும், இதரர்களும் மேற்படி அலுவலகத்திற்குச் சென்று **Ex.P.9** ஆவணத்தில் கையெழுத்துக்கள் செய்து கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்கிய முறையில் நான் இவ்வழக்கிற்கு சாதகமாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/பாலசுப்பிரமணியம்